# தஹஜ்ஜு த் தொழுகை (ஃகியாமுல் லைல்)

தானும் ஸாலிஹீன்களான இறைநேசர்கள் மற்றும் அல்லாஹ்வுடன் நெருங் கியவர்களான அடியார்களில் ஒருவராகக் கருதப்படவேண்டும் என்றும், ஒரு புறம் பாவங்களிலிருந்து விலகித் தூய்மையுடனும், மறுபுறம் உடலால் எவ் விதக் குறையோ நோய்களுக்கு ஆளாக்கப்பட்டவராகவோ இல்லாது தூய்மை யானவராக இருக்கவேண்டும் என்றும் மனதில் நினைக்காத ஒரு முஸ்லிம் எவ ரும் இருக்கமுடியாது. இந்த அருட்கொடைகளைப் பெறுவதற்காக ஃகியாமுல் லைல் (தஹஜ்ஜுத் தொழுகை) நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே முடியும் என்ற வகையில், இதனை நிறைவேற்றும் பழக்கத்தை ஆக்கிக்கொள்வது இன்றியமையாததாக ஆகிவிடுகிறது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

عَلَيْكُمْ بِقِيَامِ اللَّيْلِ فَإِنَّهُ دَأَبُ الصَّالِحِينَ قَبْلَكُمْ، وَإِنَّ قِيَامَ اللَّيْلِ قُرْبَةٌ إِلَى اللَّهِ، وَمَنْهَاةٌ عَنْ الإِثْمِ، وَتَكْفِيرٌ لِلسَّيِّئَاتِ، وَمَطْرَدَةٌ لِلدَّاءِ عَنِ الجَسَدِ

*பொருள்: தஹஜ்ஜுத் தொழுகையைப் பேணுதலுடன் கடைபிடியுங்கள், இது உங்களுக்கு முன்னாலிருந்த ஸாலிஹீன்களுடைய வழக்கமாகும் மற்றும் அல் லாஹ்வுடன் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியுமாகும். பாவங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான ஆதாரமும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான பரிகாரமும், நோய்களிலிருந்து பாதுகாப்புக்கான வழியுமாகும் (அஹ்மத், திர்மிதமி, பைஹஃகி). அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

وَعِبَادُ ٱلرَّحْمَٰنِ ٱلَّذِينَ يَمْشُونَ عَلَى ٱلْأَرْضِ هَوْنًا وَإِذَا خَاطَبَهُمُ ٱلْجَٰهِلُونَ قَالُوا۟ سَلَٰمًا ﴿٦٣﴾ وَٱلَّذِينَ يَبِيتُونَ لِرَبِّهِمْ سُجَّدًا وَقِيَٰمًا ﴿٦٤﴾ الفرقان 3 . 64 )

*பொருள்: மேலும், ரஹ்மானுடைய உண்மையமயான அடியார்கள் எத்தகையவர் களெனில், அவர்கள் பூமியில் பணிவோடு நடப்பார்கள், அறிவீனர்கள் அவர்க ளுடன் முறைகேடாக உரையாடினால், உங்களுக்கு சலாம் (சாந்தி உண்டாகட் டும்) என்று கூறிவிடுவார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய இறைவனின் திருமுன் சுஜூது செய்தும் நின்று வணங்கியவாறும் இரவுகளைக் கழிப்பார்கள் (அல் ஃபுர்ஃகான்:63,64)*

www.jzairfalahi.com

## இதற்கான ஒழுக்கங்கள்

1 **ஒருவர் தூங்குவதற்காகச் செல்லும்போது இதற்கான நிய்யத்து செய்துகொள்ள வேண்டும்** தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ள முடியாது போனாலும் அவ ருடைய நிய்யத்திற்கான நன்மை (த்ஸவாபு) அவருக்குக் கிடைத்துவிடும்

2 **உளூ செய்து, மிஸ்வாக் செய்து அதன்பின் இந்த துஆ ஓதவேண்டும்**

اللَّهُمَّ لَكَ الحَمْدُ أَنْتَ قَيِّمُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، وَلَكَ الحَمْدُ لَكَ مُلْكُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، وَلَكَ الحَمْدُ أَنْتَ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، وَلَكَ الحَمْدُ أَنْتَ مَلِكُ السَّمَوَاتِ وَالأَرْضِ،

**وَلَكَ الحَمْدُ أَنْتَ الحَقُّ وَوَعْدُكَ الحَقُّ، وَلِقَاؤُكَ حَقٌّ، وَقَوْلُكَ حَقٌّ، وَالجَنَّةُ حَقٌّ، وَالنَّارُ حَقٌّ، وَالنَّبِيُّونَ حَقٌّ، وَمُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَقٌّ، وَالسَّاعَةُ حَقٌّ، اللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ، وَإِلَيْكَ أَنَبْتُ، وَبِكَ خَاصَمْتُ، وَإِلَيْكَ حَاكَمْتُ، فَاغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ، وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ، أَنْتَ المُقَدِّمُ، وَأَنْتَ المُؤَخِّرُ، لاَ إِلَهَ إِلَّا أَنْتَ – أَوْ: لاَ إِلَهَ غَيْرُكَ – وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلَّا بِاللَّهِ**

*பொருள்: அல்லாஹ்வே, புகழனைத்தும் உனக்கே உரியது, நீயே இந்த வானங்கள் பூமி மற்றும் அவற்றிலுள்ளவை அனைத்தையும் பரிபாலிப்பவனாவாய், புகழனைத்தும்உனக்கேஉரியது. இந்த வானங்கள்பூமிமற்றும் அவற்றிலுள்ளவை அனைத்தின் ஆட்சியதிகாரமும் உன்னிடத்திலுள்ளது, புகழனைத்தும் உனக்கே உரியது, நீயே இந்த வானங்கள் பூமி மற்றும் அவற்றிலுள்ளவைஅனைத்தின் பிரகாசமாய் இருக்கின்றாய், புகழனைத்தும் உனக்கே உரியது. நீயே இந்த வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியாய் இருக்கின்றாய், புகழனைத்தும் உனக்கே உரியது, நீயே உண்மையான இரட்சகன், உன்னுடைய வாக்குறுதிகள் உண்மையானவை, அனைவரும் உனக்கு முன்னால் ஆஜர்படுத்தப்படுவது உண்மை, உன்னுடைய அருள்வாக்குகள் உண்மையானவை, சுவர்க்கமும் உண்மையானது, நரகமும் உண்மையானது, நபிமார்கள் உண்மையானவர்கள், முஹம்மது ﷺ அவர்கள் உண்மையானவர்கள், இறுதி நாள் உண்மையானது. அல்லாஹ்வே, நான் உனக்கு முன்பாக என்னைச் சமர்ப்பிக்கின்றேன் (இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறேன்), உன்னைக்கொண்டு நான் ஈமான் கொள்கின்றேன், உன்மீதே நான் சார்ந்திருக்கின்றேன், உன்புறமாகவே நான் நோக்கியிருக்கின்றேன், உன்னைக்கொண்டே நான் விவாதிக்கவும் செய்கின்றேன், உனக்கு முன்பாகவே பிரச்சினைகளை தீர்வுக்காக வைக்கின்றேன், நான் முன் செய்த பாவங்களையும் பின்னால் செய்த பாவங்களையும் மன்னித்தருள்வாயாக, நான் எதனை மறைவாக, இரகசியமாகச் செய்தேனோ அதனையும் வெளிப்படையாகவே செய்தவற்றையும் மன்னித்தருள்வாயாக. நீயே ஆதிமுதலானவன், நீயேஇறுதிவரை இருப்பவனுமாவாய், உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை (அல்லது உன்னைத்தவிர வேறு இறைவனில்லை) வல்லமையும் ஆற்றலும் அல்லாஹ்வின் புறமானதே (புக்ஹாரி).*

**3 தஹஜ்ஜுத் தொழுகையின் முதல் இரண்டு ரகஅத்துகள் சுருக்கமானதாகத் தொழவேண்டும் அதன்பின் எவ்வகையில் விரும்பினாலும் நிறைவேற்றலாம்**

**4 எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குத் தொழவேண்டும்** அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ۚ ﴿٢٨٦﴾ البقر 286)

*பொருள்: அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளைச் சுமத்தி) சிரமப்படுத்துவதில்லை (அல் பஃகரஹ்:286)*

www.uzairafahi.com

## தஹஜ்ஜுத் தொழுகைக்கான நேரம்

இஷா தொழுகைக்குப் பிறகு ஃபஜ்ரு தொழுகைக்கான அதான் சொல்லப்படு வதற்குமுன் வரையிலும் எப்பொழுது வேண்டுமானாலும் தொழலாம். இரவின் மூன்றாவது கடைசிப் பகுதியில் தொழுவது சிறந்ததாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا، حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الآخِرُ فَيَقُولُ: مَنْ يَدْعُونِي فَأَسْتَجِيبَ لَهُ، مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ، مَنْ يَسْتَغْفِرُنِي فَأَغْفِرَ لَهُ

பொருள்: *நம்முடைய மிக்க உயர்வானவனான இரட்சகன் ஒவ்வொரு இரவிலும் இரவின் கடைசியான மூன்றில் ஒரு பகுதி இருக்கும்போது, இந்த உலகத்தின் வானத்திற்கு இறங்கி வருகின்றான் மற்றும் கூறுகின்றான், என்னை அழைத்து பிரார்த்திப்பவர் எவரும் உள்ளனரா, நான் அவர்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொள்கின்றேன், என்னிடம் ஏதும் கேட்பவர் எவரும் உள்ளனரா, நான் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்றேன், என்னிடம் பாவமன்னிப்புக் கோருபவர் எவரும் உள்ளனரா, நான் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கின்றேன்.* (புக்ஹாரி, முஸ்லிம்)

## தஹஜ்ஜுத் தொழுகைக்கான ரகஅத்துக்கள்

www.uzairfalani.com

இறைத்தூதர் ﷺ அவர்கள் பதினொன்று ரகஅத்துக்களை நிறைவேற்றுவார்கள். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் ரமஜ்தான் மாதமானாலும் மற்ற நாட்களானாலும் பதினோரு ரகஅத்துக்களை விட அதிகமாகத் தொழுகை நிறைவேற்றியது கிடையாது (பெரும்பாலான முஹத்தித்ஸீன்கள்). அவர்கள் ﷺ சில சமயங்களில் பதிமூன்று ரகஅத்துக்களையும் நிறைவேற்றியுள்ளார்கள். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் மேலும் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையில் பதிமூன்று ரகஅத்துக்களை நிறைவேற்றுவார்கள், மற்றும் ஐந்து ரகஅத்துக்களைக் கொண்ட வித்ரு தொழுகை நிறைவேற்றுவார்கள், இந்த ஐந்து ரகஅத்துக்களில் கடைசியில் மட்டுமே அமர்ந்துகொள்வார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).

விரும்பத்தக்கது யாதெனில், ஒருவர் குறைந்த அளிவில் தொழுதாலும், அதனைத் தொடர்ந்து பேணுதலுடன் நிறைவேற்றவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்களிடம் எந்த அமல் அல்லாஹ்விடத்தில் சிறந்தது என்று கேட்கப்பட்டபோது அவர்கள் ﷺ கூறினார்கள், எந்த ஒரு நற்செயல் தொடர்ந்து பேணுதலுடன் செய்யப்படுமோ அதுவே, அது குறைந்ததாக இருந்தாலும் சரியே (புக்ஹாரி, முஸ்லிம்).

## தராவீஹ் தொழுகை (ரமஜ்தான் இரவுகளில்)

இது ஆண் பெண் அனைவர்மீதும் முஅக்கதஹ்வான சுன்னத்தான தொழுகையாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَامَ رَمَضَانَ إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

*பொருள்: எவர் ஒருவர் ரமஜ்தான் மாதத்தில் ஈமான் மற்றும் பிரதிபலனை எதிர்ப்பார்த்து இரவில் தொழுகையில் ஈடுபடுவார்களோ அவர்களுடைய முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிடும் (முஹத்த்ஸீன்கள்)*

**ரகஅத்துக்களின் எண்ணிக்கை**

*ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கும் மேற்கூறப்பட்ட நபிமொழியில் ரமஜ்தான் மற்றும் ரமஜ்தான் அல்லாத நாட்களிலும் பதினோரு ரகஅத்துக் களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இத்தொழுகையை நிறைவேற்றும் முறை யானது ஒவ்வொரு இரண்டு ரகஅத்துக்களுக்குப்பின்பும் சலாம் கூறி தொழுகை முடித்துக்கொள்ளப்படும் மற்றும் ஒவ்வொரு நான்கு ரகஅத்துக்களுக்குப் பின் னும் சிறிது இடை ஓய்வு அளிக்கப்படும். இதன் காரணமாகவே, இது தராவீஹ் தொழுகை எனப்படுகின்றது. இத்தொழுகை ஜமாஅத்தாகவும் தனித் தனியாகவும் நிறைவேற்றலாம். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார் கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் இத்தொழுகையை மஸ்ஜிதில் நிறைவேற்றி னார்கள், அப்போது மக்கள் சிலரும் அவருடன் இதனை நிறைவேற்றினார்கள். இரண்டாவது நாளில் அநேக நபிமத்தோழர்கள் இத்தொழுகையில் கலந்து கொண்டார்கள், அதன்பின் மூன்றாவது இரவிலும் நான்காவது இரவிலும் பெருமளவில் நபித்தோழர்கள் பள்ளிவாசலில் கூடிவிட்டனர். ஆனால், இறைத் தூதர் ﷺ அவர்கள் வீட்டிலேயே தங்கிவிட்டார்கள், பள்ளிவாசலுக்குச் செல்ல வில்லை. மறுநாள் காலையில் அவர்கள் ﷺ பள்ளிவாசலுக்குச் சென்றபோது மக்களைப் பார்த்துக் கூறினார்கள், நீங்கள் நேற்றிரவு என்ன செய்தீர்கள் என்பது எனக்குத் தெரியும், இருப்பினும், நான் பள்ளிவாசலுக்கு வராததற்கான ஒரே காரணம், இத்தொழுகை உங்கள்மீது கட்டாயக் கடமையானதாக (ஃபர்ஜ்து) ஆக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே (புக்ஹாரி, முஸிலிம்). ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் ஹஜ்ரத் உபை பின் கஅப் (ர) அவர்களுக்கு இத்தொழுகையை மக்களுடன் ஜமாஅத்தாக நிறைவேற்றி வைக்குமாறு உத்தரவிட்டார்கள், அதன்பின் அவர்கள் இத்தொழுகையை மக்க ளுடன் இருபது ரகஅத்துகளாக நிறைவேற்றினார்கள்.(புக்ஹாரி). ரமஜ்தான் மாதத்தில் குறைந்தது ஒரு முறையாவது திருக்ஃகுர்ஆன் முழுவதுமாக தராவீஹ் தொழுகையில் ஓதப்படுவது சிறந்ததாகும், இதன் மூலம் தொழுகையில் திருக் ஃகுர்ஆன் முழுவதுமாக ஓதப்படுவது கேட்கும் சுன்னத்தும் நிறைவேற்றப் படுகின்றது.*

* * *

www.uzairfalahi.com